## வன பரிபாலனத் திணைக்கள நிதியம் - 2016

வன பரிபாலனத் திணைக்கள நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் வன பரிபாலன கட்டளைச் சட்டத்தின் (451 ஆம் அதிகாரம்) 64 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் 10 - ஊ இலக்க கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வன பரிபாலனத் திணைக்கள நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய தண்டப்பண வருமானம் ரூபா 69,500 நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வன பரிபாலனத் திணைக்களத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்கும் பயிலுனர் ஊழியரொவருக்கும் செலுத்தப்பட்ட ரூபா 719,045 தொகையான ஊழியர் சம்பளம் மற்றும் ரூபா 15,379 தொகையான ஏனைய செலவினம் என்பன வன பரிபாலன நிதியத்தின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

1966 இன் 13 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் மற்றும் 1979 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட (451 ஆம் அதிகாரத்தின்) வன பரிபாலன கட்டளைச் சட்டத்தின் 64 ஆம் பிரிவுக்கு முரணாக நிதியத்திலிருந்து திணைக்களத்திற்குரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17,414,389 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,583,876 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 2,169,487 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது பாதுகாப்பு செலவினம் மற்றும் பயிற்சிச் செலவினம் முறையே ரூபா 7,517,524 இனாலும், ரூபா 423,914 இனாலும் அதிகரித்தமை மேற்குறித்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

நிதியத்தின் முன்னைய ஆண்டு வருமானம் ரூபா 32,624,176 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 37,163,263 ஆக இருந்தமையால் அதன் பிரகாரம் 4,539,087 ஆல் அதாவது 13.91 சதவீத்தினால் வருமானம் அதிகரித்திருந்தது. அவ்வாறே நிதியத்தின் முன்னைய ஆண்டின் செலவினம் ரூபா 13,040,299 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அது ரூபா 19,748,874 வரை ரூபா 708,875 ஆலும் அதாவது 51.44 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வதிகரிப்பிற்கு பாதுகாப்பு செலவினங்களில் 100 சதவீத அதிகரிப்பு காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

வனக் குற்றங்கள் தொடர்பாக குற்றங்களை சட்டத்தின் முன்கொண்டுவரும் வன பரிபாலனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் பரிசுப் பணத்தை வழங்குதல், சாட்சியாளர்களுக்கும் வன உத்தியோகத்தர்களுக்கும் நீதிமன்ற பிரயாணங்களுக்காக செலவினங்களைச் செலுத்துதல் மற்றும் வன உத்தியோகத்தர்கள் தமது செயற்பாடுகளை செயற்திறனாக நடாத்திச் செல்வதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் உள்ளடங்கலாக வன பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு செலவினங்களைச் செய்தல் நிதியத்தின் அடிப்படை நோக்கமாகும்.

நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது முன்னைய ஆண்டின் வருமானத்தில் செலவிடப்பட்ட அளவு 40 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின்போது வருமானத்தில் செலவிடப்பட்ட அளவு 53 சதவீதமாகும். இதன் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் வருமானத்தில் அதிக அளவு செலவிடப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீதிமன்றத்தின் மூலம் அறவிடப்பட்ட பணம் வன நிதியத்தில் செலவு வைக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் ஆண்டின்போது ஒவ்வொரு மாதத்திற்காகவும் கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் வருமானத்தை சரியாகக் கணிப்பிடுவதற்கோ அல்லது அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை செயற்பாடுகளோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வனக் குற்றவியல் வழக்குகள் முடிவடைந்த போதிலும் அந்த வன குற்றங்களை தடுப்பதற்காக பங்களிப்புச் செய்த உத்தியோகத்தர்களினால் பரிசுப் பணத்தைக் கோருவதற்கும் கோரப்பட்ட பரிசுப்பணத்தை வழங்குவதிலும் உள்ள தாமதங்களைத் தவிர்ப்பதற்காக முறையான வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய பீஎவ்டீ/ஆர்ஈடீ/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதித் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 04 செலவின விடயங்களில் மதிப்பீட்டுச் செலவினத்தில் 10 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையான் சேமிப்பொன்று காணப்பட்டது. ஒழுங்குமுறையான செலவின நிருவாகம் இச் சேமிப்புக்களுக்கான காரணம் என முகாமைத்துவம் தெரிவித்திருந்த போதிலும் ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக கவனத்தில் கொள்ளக்கூடிய சேமிப்பு காணப்பட்டமையால் பாதீட்டு மதிப்பீடு சரியான அடிப்படையில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது வன பரிபாலன நாயகத்திற்குத் தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | - | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யாமை. |
| (ஆ) | நிதிக் கட்டுப்பாடு | - | கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு முரணாக நிதியத்திலிருந்து செலவினங்களைச் செய்தல் |
| (இ) | வருமானக் கட்டுப்பாடு | - | நீதிமன்றம் மூலம் அறவிடப்பட்ட தண்டப்பணத்தை தாமதமின்றி திணைக்களம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | சரியான பாதீட்டு மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமை. |